

# வாசகர் வாய்ஸ்

**■ வடிவேல்குமார் - கும்பகோணம்.**

ஹன்டா வைரஸைப் பற்றி நாளிதழ்களில் துணுக்குச் செய்தியாக படித்தபோது சாதாரணமாகத்தான் நினைத்தேன். ஆனால் அது எவ்வளவு ஆபத்தானது, அதிலிருந்து தற்காத்துக் கொள்ள என்ன வழி என்பது போன்றவற்றை விளக்கமாக சண்டே ஸ்பெஷலில்தான் படித்தேன். மக்கள் நலனை கருத்தில் கொள்வதில் முன்னணி வகிப்பது தினமலர்தான் என்பதை மீண்டும் மீண்டும் நிரூபித்து வருகிறீர்கள். நன்றி.

**■ அசோக்ராஜன் - மணப்பாறை.**

இப்போதான் சிக்கன்குனியா வந்து ஒரு வழி ஆக்கிட்டுப் போச்சு. மறுபடியும் எலி வைரஸா? உடம்பு தாங்காதுடா சாமி. ஆளே இல்லாத தீவுகளில் போய் ஒளிஞ்சுக்கிட்டாத்தான் நோய்களே இல்லாமல் வாழ முடியும் போல.

**■ வசந்தி - கரூர்.**

சண்டே ஸ்பெஷலில் வந்த குட்டீஸ் பைக்கை பார்த்து விட்ட என் பத்து வயது பையன் இரண்டு நாட்களாக அதே போல் தனக்கும் வேண்டும் என்று அடம் பிடிக்கிறான். ஏன் சார் இப்படி?

**■ ராஜ்குமார் - சேலம்.**

'மாற்றம் ஒன்றே மாற்றம் இல்லாதது' என்ற தத்துவம் மட்டுமே உலகில் மாறாத உண்மை. நியுட்ரினோ ஆய்வு கண்டுபிடிப்பு மூலம் அறிவியல் உலகில் பல புதிய மாற்றங்களும், கண்டுபிடிப்புகளும் நிகழப்போவது நிச்சயம்.

**■ மயில்வாகனன் - திருமயம்.**

சண்டே ஸ்பெஷலில் கற்பனை கருப்புவோடு, வலைவீச்சும் சேர்ந்து சிரிக்க வைப்பதைப் பார்க்கும்போது ஒரே கல்லுல ரெண்டு மாங்காய் என்ற வாசகம்தான் நினைவுக்கு வருகிறது.

**■ செந்தில் - வாணியம்பாடி.**

ஆப்பிள் நிறுவனர் ஸ்டீவ் ஜாப்சுக்கு அஞ்சலி செலுத்தும் விதமாக நமது பேப்பர் ரோஸ்டில் போட்டிருந்த 'விஞ்ஞானப்பழம் நீயப்பா' என்ற கமெண்ட் சூப்பர்.

**■ தங்கவேலு - காங்கேயம்.**

சதுரங்கம், ரா ரா, வாகை சூடவா படங்களைப் பற்றிய தகவல்கள் சிறப்பாக இருந்தது. அதோடு விமர்சனமும் செய்து, படம் பார்க்கலாமா? வேண்டாமா? என குறிப்பிட்டு விட்டீர்கள் என்றால் நன்றாக இருக்கும். செய்வீர்களா..?

**■ ராஜேஸ்வரிபெரியசாமி - திருச்சி.**

நானும் கடந்த 5 ஆண்டுகளாக கொலு வைத்து வருகிறேன். ஆனால் கொலுவின் காரணக் கதையை சண்டே ஸ்பெஷல் மூலமாகத்தான் அறிந்து கொண்டேன். நன்றி. இனி நானும் அர்த்தத்தோடு கொலு வைப்பேன்.

●

சண்டே ஸ்பெஷல் இதழில் வெளிவரும் அனைத்து படைப்புகளும் தினமலர் நாளிதழுக்கு உரிமையுடையவை. வாசகர்கள், சந்தாதாரர்கள் அனுப்பும் படைப்புகள், கடிதங்களின் உரிமை தினமலருடையது ஆகும். வாசகர்களுக்கு குறிப்பு தராமல் அவற்றை சுருக்கி, திருத்தி வெளியிடும் முழு உரிமையும் தினமலருக்கு உண்டு.

- ஆசிரியர், தினமலர்.

படைப்புகளை அனுப்ப வேண்டிய முகவரி : த.பெ.எண்: 7225, சென்னை - 600008. தொலைபேசி : 044-28414121, 28414131.

# மகாத்மாவை மறந்தவர்களுக்காக...



இன்றைய மாணவர்களுக்கு மகாத்மா காந்தியை மிகப் பிடிக்கும். காரணம்... அக்டோபர் 2 காந்தி ஜெயந்தியன்று பள்ளிகளுக்கு விடுமுறையாச்சே. குடிமகன்களுக்கோ காந்தி என்றாலே எரிச்சல். காரணம் அன்றைய தினம் டாஸ்மாக் விடுமுறையாச்சே. மற்ற அனைவருக்கும் கூட காந்தியை பிடிக்கும். காரணம் அன்றாட வாழ்க்கையை நகர்த்தும் காகித சக்கரமான கரன்சி தாள்களில் சிரித்துக் கொண்டிருப்பவராயிற்றே.

இவைகளைத் தவிர காந்தியைப் பற்றி நமக்கு என்ன தெரியும்... அகிம்சை, உப்பு சத்தியாகிரகம், கதராடை, இன வெறியின் உச்சமாக தென்னாப்பிரிக்காவில் ரயிலில் இருந்து தள்ளிவிடப்பட்டது, கோட்சே குண்டுகளுக்கு பலியானது என சிறுவயதில் பாடப் புத்தகங்களில் படித்த சொற்ப விஷயங்கள் மட்டுமே நம்மிடம் இருக்கும் காந்தியின் நினைவுகள். மகாத்மா என உலக நாடுகள் அவரைக் கொண்டாடினாலும் அவர் பிறந்த இந்தியாவில் மலிவு விலைப் பதிப்பாக வெளியாகி இருக்கும் அவரது சுயசரிதை புத்தகத்தைக் கூட தள்ளுபடியில் தள்ளிவிட வேண்டிய அவல நிலை. போதும் போதாததற்கு வாழும் காந்தி என்று கதர் குல்லா வைத்த ஒருவரை கொண்டாடுகிறோம்.

மகாத்மாவை இன்றைய தலைமுறை ஏறத்தாழ மறந்து விட்ட நிலையில் மறைந்துவரும் அவரது பெருமைகளையும், நினைவுகளையும் மீட்டெடுக்கும் முயற்சியில் இறங்கியிருக்கிறார் ஒரு இளைஞர். மகாத்மாவின் பெருமைகளை வலைவாசிகளாக மாறிவிட்ட இளம் தலைமுறையினரிடம் கொண்டு சேர்க்கும் வகையில் ஒரு இணைய தளத்தை தொடங்கியிருக்கும் இந்த இளைஞர் பெயர் ராஜேஷ். இந்துஸ்தான் பெட்ரோலியம் நிறுவனத்தில் பணிபுரிகிறார். காந்தியின் உதவியாளராக இருந்த கல்யாணம், காந்தியைப் பற்றிய இந்த இணைய தளத்தை அக்டோபர் 2 ந்தேதி தொடங்கி வைத்திருக்கிறார்.

காந்தியின் உலகம் என்ற பெயரில் உருவாக்கப்பட்டுள்ள இந்த இணையதளத்தினுள் நுழைந்தால், காந்திஜியின் நினைவுப் பொருட்களின் மூலமாக ஒரு நினைவு அஞ்சலி என்ற வரவேற்புடன் விரிகின்றன பக்கங்கள். உள்ளே சுவாரஸ்யம் அளிக்கும் பல தகவல்கள் நம்மை ஆச்சரியத்தில் மூழ்கடிக்கின்றன.

'நடப்பதில் அதிக விருப்பம் கொண்ட காந்தி, நடைப்பயிற்சியை உடற்பயிற்சிகளின் இளவரசன் என்றே குறிப்பிடுவார். மேற்கத்திய நாகரிகம் குறித்து, அது ஒரு நல்ல ஐடியா என்று கிண்டலாக பதில் அளித்திருக்கிறார். அவரது முதல் ரேடியோ உரை 1931ல் இங்கிலாந்தில் இருந்த போது ஒலிபரப்பானது. படுகொலை செய்யப்பட்ட 1948 ஜனவரி 30ந் தேதி, இறை வணக்கத்திற்கு 10 நிமிடங்கள் தாமதமாக சென்றதால் ஏற்பட்ட வருத்தத்துடன் இருந்தார். 1948ல் காந்தியின் உடலை சுமந்து சென்ற அதே பீரங்கி வண்டிதான் 1997ல் அன்னை தெரசாவின் உடலையும் சுமந்து சென்றது. சாப்பிடும்போது மட்டுமே பல்செட்டை மாட்டிக் கொள்ளும் காந்தி, பின்னர் அதைக் கழற்றி சுத்தப்படுத்தி இடுப்புத் துணியில் முடிந்து வைத்துக் கொள்வார். கிறுக்கலான கையெழுத்து, உடலை பிடித்து விடச் சொல்வது - இவை இரண்டையும் தன்னிடம் உள்ள கெட்ட பழக்கங்களாக குறிப்பிடுவார் காந்தி...' இப்படியாக நீள்கிறது காந்தி பற்றிய சுவாரஸ்யத் தகவல்கள்.

இவை தவிர்த்து காந்தியின் வாழ்க்கை வரலாறு, இறுதிக்கால அனுபவங்கள், அவரைப்பற்றி அறிஞர் பெருமக்கள் கூறிய கருத்துகள், வெளிநாடுகளில் காந்தியின் நினைவாக வெளியிடப்பட்ட அஞ்சல் தலைகள், சிலைகள், தொலைபேசி அட்டைகள், பிறந்த தின ரூபாய்த் தாள்கள், விளக்கக் காட்சிகள், காணொளிகள், ஓவியங்கள் மற்றும் கேலிச்சித்திரங்கள், நாணயங்கள், வில்லைகள், அரிய புகைப்படங்கள், புத்தகங்கள் மற்றும் குறுந்தகடுகள், அஞ்சல் பொருட்கள், சிறப்பு உறையுடன் கூடிய முத்திரை, செய்தித்தாள்கள் போன்றவைகளும் இடம் பெற்றுள்ளன.

"சிறுவயதில் இருந்தே ஸ்டாம்புகள், நாணயங்கள் போன்றவற்றை சேகரிக்கத் தொடங்கினேன். இந்தியாவில் மட்டுமின்றி பல வெளிநாடுகளிலும் காந்தியின் புகழ் பரவியுள்ளதைக் கண்டு ஆச்சரியமடைந்தேன். அதுவே, காந்தியின் பக்கம் என் எண்ண அலைகளை எடுத்து சென்றது. கடந்த 7 ஆண்டாகத்தான் மகாத்மா சம்பந்தப்பட்ட அனைத்து பொருட்களையும் சேகரிக்க தொடங்கினேன்.

பல்வேறு நாடுகளில் இணையதளத்தின் வாயிலாக ஏலத்திற்கு விடப்பட்ட காந்தியின் நினைவுப் பொருட்களான ஸ்டாம்புகள், தபால் உறைகள், முதல் தாள் உறைகள் போன்றவைகளை சேகரிக்க தொடங்கினேன். இவற்றை வாங்க கிட்டத்தட்ட ரூ.5 லட்சத்திற்கும் மேல் செலவு செய்துள்ளேன். 70க்கும் மேற்பட்ட நாடுகளில் காந்தியின் சிலைகள், 120க்கும் மேற்பட்ட நாடுகளில் வெளியிட்ட ஸ்டாம்புகள் என நான் சேகரித்து வைத்தவை ஏராளம். எதற்கு தேவையில்லாமல் நேரத்தையும், உழைப்பையும் வீணாக்குகிறீர்கள் என்று முதலில் கேட்ட என் மனைவி, பின்னர் என் ஈடுபாட்டையும், எண்ணத்தையும் உணர்ந்து என் பணிகளுக்கு உறுதுணையாக இருக்கிறார்.

நான் சேகரித்த காந்தியின் நினைவுப்பொருட்களை இளைய தலைமுறையினருக்குக் கொண்டு செல்ல வேண்டும் என்பதற்காக, நான் தேர்ந்தெடுத்த வழிதான் இணையத்தளம். அதன் வாயிலாக இன்றைய தலைமுறையை எளிதில் அடைய முடியும் என்ற நம்பிக்கை ஏற்பட்டது. தனியார் நிறுவனமான ரெய்டர்ஸ் டெக்னாலஜி நிறுவனத்துடன் அதற்கான முயற்சியில் இறங்கினேன். அந்நிறுவனத்தின் உரிமையாளர் மணிகண்டன் ஆர்வமுடன் என் இணையதளத்தை மக்களிடம் எடுத்து செல்ல ஒத்துழைப்பு அளித்தார்.

இதன் மூலம் காந்திய சிந்தனைகளான அன்பு, அகிம்சை, சமத்துவம், உண்மை மற்றும் சகோதரத்துவம் ஆகியவைகளை நமது தலைமுறையினர் மட்டுமல்லாது, இனி வரும் தலைமுறையினர் உணர்ந்து கொள்ளவும், அதைப் பின்பற்றுவதற்கான ஒரு சூழலையும், ஆர்வத்தையும் ஏற்படுத்த முயன்றுள்ளேன்'' என்று ஆர்வமுடன் சொல்லும் ராஜேஷ், பள்ளி மாணவர்கள் பார்வையிட வசதியாகவும், காந்திய கோட்பாடுகளை அவர்கள் மனதில் விதைக்கும் வகையிலும், தான் சேகரித்திருக்கும் காந்தியின் நினைவுப் பொருட்களை கண்காட்சியாக வைக்க திட்டமிட்டிருக்கிறார். இது தொடர்பான விவரங்களுக்கு www.gandhiworld.in என்ற இணையதளத்தை பார்வையிடலாம் ●